பொதுப்பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

| | |
|---|---|
| த. பொ. ..மா.நி.ம.மே.நீ.ஆ.வி. கு.மை). அ.நு. செ [illegible]-113. | |
| த. பொ. | |
| இ.த.பொ. | |
| ஆ. சி. | |

<u>கடிது ( 3 ப) எண்.9 , நாள் 11.04.2019</u>

அனுப்புநர்
திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர்,
நீர்வள ஆதாரத் துறை,
மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம்,
தரமணி, சென்னை–113. (இணைப்புடன்)

அய்யா,

பொருள்: பொதுப்பணிகள் – பொதுப்பணித் துறை– தமிழ்நாடு அமைச்சுப் பணி – காலஞ்சென்ற திரு. எஸ். இருதயராஜ் என்பவரின் மகள் திருமதி. இ. எலிசபெத்லூர்து ராணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்யப்பட்டது – அரசு அளவில் பதிவு செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் கடிதம் எண். இ2(4)/8007/2015, நாள் 30.05.2016 மற்றும் 22.08.2016.
2. அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 02.03.2016.
3. அரசு கடிதம் எண். 11432/பி1/2016, பொதுப்பணித் துறை, நாள் 29.07.2016.
4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் கடிதம் எண். இ2(4)/8007/2015, நாள்12.09.2017 மற்றும் 4.10.2018.
5. அரசு கடித எண்.21283/பி1/2017–1, நாள் 6.12.2017.
6. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை 01.08.2018.
7. அரசு கடித எண்.21283/பி1/2017–2, நாள் 18. 02.2019.

---

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதத் தொடர்புகளின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை 1–இல் காணும் கடிதத்தில், திருச்சி மண்டலம், திருச்சி நிலநீர் உபகோட்டத்தில் ஒட்டுராகப் பணிபுரிந்து வந்த திரு. எஸ். இருதயராஜ் என்பவர் பணியிலிருக்கும் போது 10.08.2001 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது மகள் திருமதி. இ. எலிசபெத் லூர்து ராணி, பொதுப்பணித் துறையில் இளநிலை உதவியாளராக 10.06.2013 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகின்றார் என்றும் தெரிவித்து, தனியர்

திருமதி. இ. எலிசபெத் லூர்து ராணி அவர்களின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 10.06.2013 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசாணையினைப் பெற்று வழங்குமாறு கோரப்பட்டது.

3. பார்வை 2–இல் காணும் அரசாணையின்படி ஆய்வு செய்து தனியரின் பணியினை வரன்முறை செய்து உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பார்வை 3–இல் காணும் அரசுக் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

4. பார்வை 4–இல் காணும் தங்களது கருத்துருவில், தனியரின் பணியானது இளநிலை உதவியாளர் பதவியில் 10.06.2013 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்பட்டுள்ளதைத் தெரிவித்து, தனியரின் பணி வரன்முறை குறித்து அரசளவில் உரிய ஆணையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

5. இந்நிலையில், திருமதி. இ. எலிசபெத் லூர்து ராணி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியானது, திருச்சி நிலநீர் கோட்ட செயற்பொறியாளரின் செயல்முறை ஆணை எண். 443/நிஉ1/2016, நாள் 30.11.2016–இல் தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 10.06.2013 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்பட்டது குறித்த கருத்துரு, அரசுக் கடித எண்.19205/க்யூ1/2010–2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 3.8.2010–இன்படி அரசால் நன்கு கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, தனியரின் பணி 10.06.2013 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பார்வை–2இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி வரன்முறை செய்யப்பட்டதை அரசு ஏற்றுப் பதிவு செய்கிறது என்பதனைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

5. திருமதி. இ. எலிசபெத் லூர்து ராணி, இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறை செய்தது தொடர்பாக, தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

6. இந்நேர்வு தொடர்பான பார்வை 4–ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட அசல் ஆவணங்களில், ஏற்கனவே பார்வை 7–ல் காணும் அரசுக் கடிதத்துடன் திருப்பியனுப்பப்பட்ட கூடுதல் சான்று/சான்றாவணங்கள் நீங்கலாக, ஏனைய சான்றுகள் மற்றும் சான்றாவணங்கள் இத்துடன் தங்களுக்குத் திருப்பியனுப்பப்படுகின்றன. அவற்றைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக,

நகல்

திருமதி. இ. எலிசபத் லூர்து ராணி, இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை–113 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை –5 .
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை– 9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.